©
தமிழ்நாடு அரசு
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 6.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 35] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 1, 2021
ஆவணி 16, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2052

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**அறிவிக்கை - I**

*[அரசாணை (நிலை) எண். 88 , வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD4(2)]த் துறை, நாள்: 30-06-2021]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 15.12..1982 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** வெளியீட்டில் பாகம்II பிரிவு 2 இல் 812ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II (2)/HOU/7095/82 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்து விட்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டமிடல் பகுதியில் கூடுதல் பகுதிகளைச் சேர்ப்பதற்காக, 21.08.1974 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம்II பிரிவு 2-இல் 438-439ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் II (2)/RUL/3746/74 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். அவ்வாறு செய்வதற்கான இதன் நோக்கம், இச்சட்டத்தின் மேற்சொன்ன 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (5)-ஆம் பகுதியில் கோரியுள்ளவாறாக, 23.10.2013 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழில்** பாகம்II-பிரிவு 2-இல் 707-709ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II (2)/HOU/792/2013 ஆம் எண் அறிவிக்கையிலும், 13.11.2014 ஆம் நாளிட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசிதழிலும் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில் உள்ள "விவர அட்டவணைக்குப்" பதிலாக, பின்வரும் "விவரஅட்டவணை" அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:-

**"விவர அட்டவணை.**

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | திருச்சிராப்பள்ளி | **திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**<br>6. திருச்சிராப்பள்ளி<br>19. திருவளர்சோலை<br>18. கொண்டயம் பேட்டை<br>16. வெள்ளித்திருமுத்தம்<br>23. திம்மராயசமுத்திரம்<br>15. மேலூர்<br>59. சாத்தனூர் புதூர் (வடக்கு)<br>60. சாத்தனூர் புதூர் (தெற்கு)<br>42. பிராட்டியூர் (மேற்கு)<br>43. பிராட்டியூர் (கிழக்கு)<br>38. உய்யக்கொண்டான் திருமலை<br>1. பாண்டமங்கலம்<br>2. தாமலவாருபயம்<br>3. சிந்தாமணி<br>4. புதூர், தென்னூர், நாட்டரச பள்ளிவாசல், பெரியவடவூர்<br>5. K. அபிஷேகபுரம்<br>28. கொட்டப்பட்டு<br>25. ஆலத்தூர்<br>26. வரகனேரி<br>8. தாராநல்லூர்<br>7. தேவதானம் சின்னவடவூர்<br>9. அரியமங்கலம்<br>14. பாப்பாகுரிச்சி<br>24. எல்லக்குடி<br>23. அகரம்<br>10. உக்கடை அரியமங்கலம்<br>27. செங்குளம்<br>44. பஞ்சப்பூர்<br>31. கீழக் கல்கண்டார் கோட்டை<br>22. திருவரம்பூர் |

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | **ஸ்ரீரங்கம் வட்டம்**<br>22. கிளிக்கூடு<br>21. உத்தமசேரி<br>20. பனையபுரம்<br>24. கம்பரசம் பேட்டை<br>14. முத்தரசநல்லூர்<br>10. திருச்செந்துரை<br>13. பழூர்<br>12. அல்லூர்<br>8. மேக்குடி<br>9. பெரிய கருப்பூர்<br>11. கடயாக்குரிச்சி<br>58. மேக்குடி (இனம்)<br>25. மருதண்டாக்குறிச்சி<br>36. சோமரசம்பேட்டை<br>41. தாயனூர்<br>45. கள்ளிகுடி (வடக்கு)<br>46. கள்ளிகுடி (தெற்கு)<br>40. நாச்சிக்குறிச்சி<br>39. சோழங்கநல்லூர்<br>37. மல்லியம்பத்து<br>7. அந்தநல்லூர்<br>5. திருப்பராய்துரை<br>6. கொடியாலம்<br>27. குழுமணி<br>26. பேரூர்<br>35. குமாரவயலூர்<br>28. முள்ளிக்கருப்பூர்<br>34. அதவத்தூர் (கிழக்கு)<br>33. அதவத்தூர் (மேற்கு)<br>62. திருமலைசமுத்திரம் |

| தொடர் எண் | உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர் | வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | 47. நவலூர் கொட்டப்பட்டு<br>55. பாகனூர்<br>57. நாகமங்கலம்<br>63. முடிகண்டம்<br>39. துவாக்குடி நகராட்சி<br>**திருவெறும்பூர் வட்டம்**<br>11. பனையக்குரிச்சி<br>13. குவளக்குடி<br>12. கீழமுல்லக்குடி<br>15. வேங்கூர்<br>17. அரசங்குடி<br>16. நடராஜபுரம்<br>18. கிளியூர்<br>19. பத்தளப்பேட்டை<br>21. கூத்தப்பார் பேரூராட்சி<br>20. கிருஷ்ணசமுத்திரம் ( செம்மன்குளம் உட்பட)<br>33. நவல்பட்டு<br>32. சோழமாதேவி<br>29. குண்டூர்<br>35. சூரியூர்<br>44. அசூர்<br>43. தேனேரிப்பட்டி<br>40. வாளவந்தான்கோட்டை<br>41. திருநெடுங்குளம்<br>37. இலந்தபட்டி<br>42. பழங்கணாங்குடி<br>34. கும்பகுடி, வேலாயுதங்குடி<br>36. காந்தலூர்<br>38. பூலாங்குடி<br>30.கிளக்குரிச்சி |

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | **லால்குடி வட்டம்**<br>59. தலக்குடி<br>57. மாடக்குடி<br>61. புதுக்குடி<br>60. அப்பாத்துரை ( தெற்கு சத்தரம் உட்பட)<br>58. கீரமங்கலம்<br>81. எசனக்கோரை<br>82. த. வளவனூர்<br>80. வாளாடி<br>62. சிருமருதூர்<br>56. வ. துரையூர்<br>55. மருதூர்<br>54. R. வளவனூர்<br>75. மணக்கால் (கிழக்கு)<br>76. மணக்கால் (மேற்கு)<br>92. கூகூர்<br>89. லா. அபிஷேகபுரம்<br>77. சிருதையூர் லால்குடி பேரூராட்சி<br>90. மும்முடி சோழமங்கலம்<br>66. பூவாளூர் (மேற்கு)<br>67. பூவாளூர் (கிழக்கு) பூவாளூர் பேரூராட்சி<br>65. திருமங்கலம்<br>63. கீழப்பெருங்காவூர்<br>79. நெரிஞ்சிலக்குடி<br>64. நகர்<br>78. ஆங்கரை<br>85. பம்பரம்சுத்தி<br>87. சேஷ சமுத்திரம்<br>86. செவ்வந்தி நாதபுரம்<br>84. திருமணமேடு (கிழக்கு)<br>83. திருமணமேடு ( மேற்கு)<br>88. எடையாதுமங்கலம் |

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | **மணச்சநல்லூர் வட்டம்** |
| | | 46. பிச்சாண்டார் கோயில் |
| | | 31. சோழங்கநல்லூர் |
| | | 32. கரியமாணிக்கம் (மேற்கு) |
| | | 33. கரியமாணிக்கம் (கிழக்கு) |
| | | 34. கிளியநல்லூர் ( வடக்கு) |
| | | 35. கிளியநல்லூர் (தெற்கு) |
| | | 36. மேலப்பத்து |
| | | 37. திருவசை |
| | | 38. கோவத்தக்குடி |
| | | 28. தீராம்பாளையம் |
| | | 29. திருப்பைஞ்ஞீலி (வடக்கு) |
| | | 30. திருப்பைஞ்ஞீலி (தெற்கு) |
| | | 27. பூனாம்பாளையம் |
| | | 42. மணச்சநல்லூர்<br>41. உளுந்தக்குடி<br>43. மேலசீதேவிமங்கலம் ] மணச்சநல்லூர் பேரூராட்சி |
| | | 39. அழகிய மணவாளம் |
| | | 40. மாதவப் பெருமாள் கோவில் |
| | | 45. கூத்தூர் |
| | | 44. வெங்கங்குடி |
| | | 24. ராசாம்பாளையம் |
| | | 20. சமயபுரம் |
| | | 23. கல்பாளையம் |
| | | 22. S. கண்ணனூர் (மேற்கு)<br>பேரூராட்சி<br>21. . S. கண்ணனூர் (கிழக்கு) ] பேரூராட்சி |
| | | தஞ்சாவூர் மாவட்டம், |
| | | பூதலூர் வட்டம் |
| | | 1. தொகுர்.” |

**அறிவிக்கை - II**

*[அரசாணை (நிலை) எண். 88 , வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD4(2)] த் துறை, நாள்: 30-06-2021]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தற்போது அறிவிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டமிடல் பகுதிக்கு, இதுவரையில் செயலில் உள்ள முந்தைய திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டமிடல் பகுதிக்காக அறிவிக்கப்பட்ட விதிகள் மற்றும் ஆணைகள், வழங்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகள், அறிவிப்புகள் மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பொருந்தும் என இதனால் அறிவிக்கிறார்.

**ஹிதேஷ் குமார் எஸ் மக்வானா**,
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தித் மொழி பெயர்ப்புத் துறை*

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (ப) எண். 268 , தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 12-07-2021]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதிய பின்வரும் வரைவு அறிவிக்கை மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், இது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் யாதொரு நபரிடமிருந்து பெறப்படும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை-600 006 -இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம்,சென்னை – 600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 21.3.2017 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் பாகம்-II, பிரிவு-2 இல் 1 மற்றும் 2 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/184(g-1)/2017 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பந்தல் அமைக்கும் பணியில் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு வழங்கத்தக்கக் குறைந்தளவு ஊதிய வீதங்களை அதன் (3) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**பந்தல் அமைக்கும் பணியில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* *(1)* | *தொழிலாளர்களின் வகைகள்* *(2)* | *நாளொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்கள்* *(3)* | | | |
|---|---|---|---|---|---|
| | | *மண்டலம் A (ரூ. காசு)* | *மண்டலம் B (ரூ. காசு)* | *மண்டலம் C (ரூ. காசு)* | *மண்டலம் D (ரூ. காசு)* |
| 1. | மேற்பார்வையாளர் | 479.50 | 425.50 | 348.50 | 310.00 |
| 2. | பள்ளம் தோண்டுபவர், கம்பு நடுபவர் | 464.00 | 387.00 | 333.00 | 294.50 |
| 3. | கூரை வேய்பவர் | 448.50 | 364.00 | 317.50 | 279.00 |
| 4. | கூரை/கல்நார்/கண்ணாடி/ லைட்ரூப் (Lite roof) அமைப்பவர் | 433.00 | 356.00 | 310.00 | 264.00 |
| 5. | அலங்காரத் துணி கட்டுபவர் | 433.00 | 356.00 | 310.00 | 264.00 |
| 6. | மலர் அலங்காரம் செய்பவர்/ அலங்காரம் செய்பவர் | 418.00 | 348.50 | 294.50 | 256.00 |
| 7. | வளைவு (ஆர்ச்) அமைப்பவர் | 402.50 | 341.00 | 287.00 | 249.00 |
| 8. | சாமியானா நடுபவர் | 387.00 | 325.50 | 279.00 | 241.00 |
| 9. | தென்னை ஓலை பின்னுபவர் | 371.50 | 310.00 | 272.00 | 233.00 |
| 10. | கூரை அகற்றுபவர் | 356.00 | 294.50 | 264.00 | 226.00 |
| 11. | பந்தல் பொருட்களைக் கொண்டுச் செல்பவர் | 341.00 | 287.00 | 249.00 | 218.00 |
| 12. | மைக் செட்டு /சீரியல் செட்டு இயக்குபவர், மின்உற்பத்தி சாதனத்தை இயக்குபவர் | 325.50 | 279.00 | 241.00 | 210.00 |
| 13. | கூரை கொண்டு செல்பவர் மற்றும் ஒப்படைப்பவர் | 310.00 | 272.00 | 233.00 | 202.00 |
| 14. | காவலாள் | 310.00 | 272.00 | 233.00 | 202.00 |

**விளக்கங்கள்.- (1) மண்டலங்களின் வகைப்பாடுகள்.-** மண்டலங்கள் A, B, C மற்றும் D, பின்வரும் பகுதிகளைக் கொண்டிருக்கும்:-

| | | |
|---|---|---|
| மண்டலம் A | -- | மாநகராட்சிகள் |
| மண்டலம் B | -- | நகராட்சிகள் |
| மண்டலம் C | -- | பேரூராட்சிகள் |
| மண்டலம் D | -- | கிராமங்கள் |

(2) **அகவிலைப்படி.-** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன், கூடுதலாக தொழிலாளர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:-

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது, நாளொன்றுக்கு ரூ.1.25 (ஒரு ரூபாய் மற்றும் இருபத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை

அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளன்று அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டின் சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட அகவிலைப்படியின் முதல் கணக்கீடு இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) அதே பணி அல்லது பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**இரா. கிர்லோஷ் குமார்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தித் மொழி பெயர்ப்புத் துறை.*

*[அரசாணை (ப) எண் : 274 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (ஜே1)த் துறை, 15 ஜூலை 2021.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11 / 1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு, 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (c) பகுதி ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் வரைவு அறிவிக்கை, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், இது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், யாதொரு நபரிடமிருந்தும் பெறப்படும் யாதொரு மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை, சென்னை – 600 006 – இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு, 3ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (c) பகுதி ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 11. 01. 2017ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** பாகம் II, பிரிவு – 2 இல் 23 மற்றும் 24ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் II(2)/தொ.வே.வா/28/2017 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், புகையிலை தயாரிப்புத் (பீடி சுற்றுதல் நீங்கலாக பீடி தயாரித்தல்

உட்பட) தொழிலில் ஈடுபட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் நெடும்பத்தி (1) ல் குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அதன் (2)ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**புகையிலை தயாரிப்புத் (பீடி சுற்றுதல் நீங்கலாக பீடி தயாரிப்பு உட்பட) தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொழிலாளர் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு)* <br> *(ரூ. காசு.)* |
|---|---|
| (1) | (2) |
| (1) மேலாளர் | 9384.00 |
| (2) கணக்காளர் / கணினி இயக்குபவர் | 9054.00 |
| (3) எழுத்தர்/ தட்டச்சர் / விற்பனையாள் | 8724.00 |
| (4) சேகரிப்பவர் | 8559.00 |
| (5) சரிபார்ப்பவர் / மேஸ்திரி / வகைப்படுத்துபவர் / கண்காணிப்பாளர் | 8394.00 |
| (6) இலைத்தூள் வழங்குபவர்/ பை தைப்பவர் / சிப்பமாக்குபவர் | 8229.00 |
| (7) அலுவலக உதவியாள் / ஏவலாள் | 8229.00 |
| (8) ஓட்டுநர் (டிரக் / லாரி) | 8229.00 |
| (9) ஓட்டுநர் (சீருந்து / வேன்) | 8064.00 |
| (10) காவலாளி | 7404.00 |
| (11) துப்புரவாளர் / பெருக்குபவர் | 6909.00 |
| (12) ஏனைய தொழிலாளர்கள் | 6909.00 |

செய்யும் வேலைக்கேற்ப ஊதியங்கள் :

(1) 4000 கட்டுகளின் மீது லித்தோ உறைகளுக்கு ... நாளொன்றுக்கு ரூ. 318.75

பெயர்ச்சீட்டு ஒட்டுதல்

விளக்கங்கள் :-

(i) ஒவ்வொரு கட்டும் 25 பீடிகளைக் கொண்டது.

(ii) கட்டு ஒன்றுக்கு 10, 15 அல்லது 20 பீடிகள் கொண்ட கட்டுகளுக்கு பெயர்ச்சீட்டு ஒட்டுவதற்கு வீதப்படியான ஊதியங்கள் வழங்கப்பட வேண்டும்.

(iii) "மேல் பெயர்ச்சீட்டு ஒட்டுவதற்கு" 30% மிகை ஊதியம் வழங்கப்பட வேண்டும். அதற்கு அகவிலைப்படியும் வழங்கப்பட வேண்டும்.

(2) வளைய பெயர்ச்சீட்டு ஒட்டுதல் ...... 1000 பீடிகளுக்கு ரூ. 12.75

(வளைய பெயர்ச்சீட்டு ஒட்டுவதற்கு பசையும் நூலும் நிருவாகத்தால் வழங்கப்பட வேண்டும்.)

ஒரு நாள் உழைப்பு என்பது நாளொன்றுக்கு 10,000 பீடிகள் தயாரிப்பதாகும்.

**விளக்கங்கள்:**

(1) **அகவிலைப்படி** : மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும் :-

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியாக திங்கள் ஒன்றுக்கு ரூ. 42.90 (நாற்பத்தி இரண்டு ரூபாய் தொண்ணூறு காசுகள் மட்டும்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளில் அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 – ஆல் வகுக்க வேண்டும்

(4) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**இரா. கிர்லோஷ் குமார்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தித் மொழி பெயர்ப்புத் துறை.*

*[அரசாணை (2ப) எண் : 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை,*
*நாள்: 22 ஜூலை 2021.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11 / 1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்(a) பகுதியின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனையைக் கருதிப்பார்த்த பின்னர். தமிழ்நாடு மாநிலத்தில் துணிகளை மடிக்கும் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் நிர்ணயம் செய்கிறார்.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**துணிகளை மடிக்கும் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொழிலாளர்களின் வகைகள்* (1) | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) (ரூ.பை)* (2) |
|---|---|
| *துணிகளை மடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்* | 6076.00 |

***விளக்கங்கள்:— (1) அகவிலைப்படி*** *: மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் தொழிலாளர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.*

*(i) அகவிலைப்படியானது, 2010-ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகளாகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் அகவிலைப்படி மாதமொன்றுக்கு ரூ. 37.70 (முப்பத்தேழு ரூபாய் எழுபது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.*

*(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.*

*(iii) முதல் கணக்கீடு இந்த அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.*

*(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.*

*(3) நாள் ஊதிய வீதங்களாக கணக்கிட , மாதாந்திர ஊதியங்களை 26-ஆல் வகுக்க வேண்டும்.*

*(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.*

**இரா. கிர்லோஷ் குமார்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தித் மொழி பெயர்ப்புத் துறை.*

*[அரசாணை (2ப) எண் : 35, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 23 ஜூலை 2021.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 04-03-2015 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2-இல், 222 மற்றும் 223 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/115/2015 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் கயிறு தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அதன் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறாக இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**கயிறு தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்*<br>*(1)* | *பணியாளர்களின் வகைகள்*<br>*(2)* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு)*<br>*(3)* |
|---|---|---|
| I. | <u>பயிற்சி பெற்றோர்:</u> | |
| | (1) ஓட்டுநர் | மாதமொன்றுக்கு 6426.00 |
| | (2) எந்திரப் பணியாளர் | |
| | (3) இயந்திரக் கம்மியர் | |
| | (4) இயக்குபவர் | |
| II. | <u>ஓரளவு பயிற்சி பெற்றோர்:</u> | |
| | (1) ஓட்டுநர் ( உதவியாள்) | மாதமொன்றுக்கு 6263.00 |
| | (2) உதவி இயந்திரக்கம்மியர் | |
| | (3) மட்டை உரிக்கும் இயந்திரக் கம்மியர் | |
| | (4) மட்டைகளை அடித்து நசுக்குபவர் (crusher) | |
| III. | <u>பயிற்சி பெறாதோர் :</u> | |
| | (1)டர்போ கிளீனர் (Turbo Cleaner) | மாதமொன்றுக்கு 5938.00 |
| | (2) இயந்திரத்தை சுத்தப்படுத்துபவர் | |
| | (3) உலர் செய்முறை இடத்திற்குக் கொண்டு செல்பவர் (Drying Yard Carrier) | |
| IV. | <u>தேங்காய் மட்டை உரித்தெடுப்பதில் உள்ள துணைப்பணிகள் :</u> | |

| *தொடர் எண்*<br>*(1)* | *பணியாளர்களின் வகைகள்*<br>*(2)* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு)*<br>*(3)* |
|---|---|---|
| | (1) தேங்காய் மட்டைகளை உரித்தெடுத்து, உருளை எந்திரப் பகுதிக்குக் கொண்டு சென்று அவற்றைக் குழியில் போட்டு ஊறவைப்பதற்கு (1000 தேங்காய் மட்டைகளுக்கு) | 313.14 |
| | (2) தேங்காய் மட்டைகளை எண்ணுவதற்கு (1000 தேங்காய் மட்டைகளுக்கு) | 52.60 |
| | (3) பிளவுபட்ட தேங்காய் மட்டைகளைக் குழியிலிருந்து அகற்றுவதற்கு (1000 தேங்காய் மட்டைகளுக்கு) | 83.50 |
| | (4) ஊறிய தேங்காய் மட்டைகளை அடித்தெடுப்பதற்கு (100 தேங்காய் மட்டைகளுக்கு) | 81.45 |
| V | <u>(1) முப்பிரி கயிறு திரித்தல் :</u> | |
| | (1) 1.80 மீட்டர் - ஒவ்வொன்றும் 100 கயிறுகள் கொண்ட ஒரு கட்டு. | 500.43 |
| | (2) 2.15 மீட்டர் - ஒவ்வொன்றும் 100 கயிறுகள் கொண்ட ஒரு கட்டு | 500.43 |
| | (3) 2.88 மீட்டர் - ஒவ்வொன்றும் 100 கயிறுகள் கொண்ட ஒரு கட்டு | 700.22 |
| | (4) 3.60 மீட்டர் - ஒவ்வொன்றும் 100 கயிறுகள் கொண்ட ஒரு கட்டு | 895.75 |
| | (5) 4.32 மீட்டர் - ஒவ்வொன்றும் 100 கயிறுகள் கொண்ட ஒரு கட்டு | 1099.91 |
| | <u>(2)இயந்திரம் மூலம் சுத்தம் செய்யப்பட்டு நார் திரித்தல்:</u> | |
| | (1) 1.80 மீட்டர் - ஒவ்வொன்றும் 100 கயிறுகள் கொண்ட ஒரு கட்டு. | 398.91 |
| | (2) 2.16 மீட்டர் - ஒவ்வொன்றும் 100 கயிறுகள் கொண்ட ஒரு கட்டு | 398.91 |
| | (3) 2.88 மீட்டர் - ஒவ்வொன்றும் 100 கயிறுகள் கொண்ட ஒரு கட்டு | 561.19 |
| | (4) 3.60 மீட்டர் - ஒவ்வொன்றும் 100 கயிறுகள் கொண்ட ஒரு கட்டு | 716.97 |
| | (5) 4.32 மீட்டர் - ஒவ்வொன்றும் 100 கயிறுகள் கொண்ட ஒரு கட்டு | 871.09 |
| VI | <u>கயிறு தயாரித்தல் :</u> | |
| | (1) 33 கிலோ கிராம் தென்னை நாரினை 4.50 செ.மீ. நீளமுள்ள கயிறுகளாகத் திரித்தல் | 386.38 |
| | (2) 33 கிலோ கிராம் தென்னை நாரினை 5.00 செ.மீ. நீளமுள்ள கயிறுகளாகத் திரித்தல் | 350.10 |
| | (3) 33 கிலோ கிராம் தென்னை நாரினை 10.00 செ.மீ. நீளமுள்ள கயிறுகளாகத் திரித்தல் | 301.21 |
| | (4) 33 கிலோ கிராம் தென்னை நாரினை 3.80 செ.மீ. நீளமுள்ள கயிறுகளாகத் திரித்தல் | 398.91 |
| VII | <u>பாய் முடைதல் :</u> | நாளொன்றுக்கு 220.50 |

| *தொடர் எண்* *(1)* | *பணியாளர்களின் வகைகள்* *(2)* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ. காசு)* *(3)* |
|---|---|---|
| VIII | <u>கட்டு கட்டுதல்</u> : | நாளொன்றுக்கு 220.50 |
| IX | <u>தென்னை நார் கட்டு</u> : | |
| | (1) 30 அல்லது 35 கி.கி. தென்னை நார்க்கட்டு எந்திரங்கள் வாயிலாகக் கட்டுதல் | ஒரு கட்டுக்கு 13.12 |
| | (2) 30 அல்லது 35 கி.கி. தென்னை நார்க்கட்டு கையால் கட்டுதல் | ஒரு கட்டுக்கு 16.30 |

**விளக்கங்கள்:- (1) அகவிலைப்படி:-** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன், தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர <u>நுகர்வோர் சராசரி</u> விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 = 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்.) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியாக மாதமொன்றுக்கு ரூ 36.85 (முப்பத்து ஆறு ரூபாய் எண்பத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளில் அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும் போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) (i) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(ii) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**இரா. கிர்லோஷ் குமார்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தித் மொழி பெயர்ப்புத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.